



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு நேற்று (18.2.2025) திருநெல்வேலி மாவட்டம், குலவணிகர் புரம் கிராமத்தில் ரூ.33.02 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் பொருநை அகழ்வைப்பக கட்டட கட்டுமானப் பணிகளை ஆய்வு மேற்கொண்டார்.

### 9 பேருக்கு வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது-

# 9 பேருக்கு பூம்புகார் - மாநில விருதுகள் என 18 சிறந்த கைவினைஞர்களுக்கு விருதுகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கிச் சிறப்பிப்பு!

சென்னை, பிப்.19-

வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகளை 9 சிறந்த கைவினைஞர்களுக்கும், பூம்புகார் மாநில விருதுகளை 9 சிறந்த கைவினைஞர்களுக்கும் என 18 பேருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், கைவினைத் தொழிலுக்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட 65 வயதுக்கும் மேற்பட்ட

9 சிறந்த கைவினைஞர்களுக்கு வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகளையும், கைத்திறத் தொழிலின் பங்களிப்பு, அபிவிருத்தி மற்றும் படைப்புகள் ஆகியவற்றில் சிறந்த 9 கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருதுகளையும் வழங்கி சிறப்பித்தார்.

**வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது!**

கைவினைத் தொழிலுக்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட 65 வயதுக்கு மேற்பட்ட சிறந்த கைவினைஞர்களுக்கு தமிழ்நாடு அரசால் "வாழும் கைவினைப் பொக்கிஷம்" எனும் விருது வழங்கப்படுகிறது. கைவினைஞர்களை பாராட்டுவதற்கும், அவர்களின் திறனை ஊக்குவிப்பதற்கும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தால் இவ்விருது ஆண்டுதோறும் 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் வழங்கப்பட்டு வருகிறது. வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதிற்காக ஒவ்வொரு பிரிவிற்கும் ஒருவர் வீதம் தலா 8 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம், சான்றிதழுடன் ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை வழங்கப்படுகிறது.

அதன்படி, 2023-24ஆம் ஆண்டிற்கான "வாழும் கைவினைப் பொக்கிஷம்" விருதுகளை - தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த

சி.முருகேசன் (தஞ்சாவூர் கலைத்தட்டு), ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த சொ. ராஜகோபால் (பஞ்சலோக சிற்பம்), தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த ரெ. ராதா (நெட்டி வேலை), விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த தி சி.பலராமன் (சுடு களிமண் சிற்பம்), கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சொ. நாகமுத்து ஆச்சாரி (மரச்சிற்பம்), மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ச. கிருஷ்ணமூர்த்தி (தகட்டு வேலை), திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. ஹம்சா பீவி (பனை ஓலை பொருட்கள்), மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பெ.கிருஷ்ணன் (பஞ்சலோக சிலைகள்) மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. செ. லில்லி மேரி (மூங்கில் பாயில் ஓவியம்) ஆகிய 9 விருதாளர்களுக்கு முதலமைச்சர் அவர்கள், வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதிற்கான தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, 8 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப் பத்திரம் மற்றும் தகுதிச்சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார்.

**பூம்புகார் மாநில விருது!**

"பூம்புகார் மாநில விருது" தமிழ்நாட்டின் சிறந்த கைவினைஞர்களின் கைத்திறத் தொழிலின் பங்களிப்பு, அபிவிருத்தி மற்றும் படைப்புகளை கருத்தில் கொண்டு வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக பத்து கைவினைஞர்களுக்கு ஆண்டுதோறும் 12 இலட்சம் ரூபாய் மதிப்பில் இவ்விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதுகள் ரூ.50,000/ பரிசுத் தொகை, 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் தகுதிச்சான்றிதழும் கொண்டதாகும்.

அதன்படி, 202324ஆம் ஆண்டிற்கான பூம்புகார் மாநில விருதுகளை - சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த சீ.வே. ராமகிருஷ்ணன் (உலோக சிற்பம்) மற்றும் திருமதி. கோ. குணசுந்தரி (காகிதக் கூழ் பொம்மைகள்),

சி. காத்தான் (தஞ்சாவூர் ஓவியம்) மற்றும் ரெ. மெய்யர் (சுடு களிமண் சிற்பம்), செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த கு. ரமேஷ் (மரச்சிற்பம்) மற்றும் ஹ. ஸ்ரீதர் (தேங்காய் ஓடு பொருட்கள்), திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த கா. கார்த்திகேயன் (பனை ஓலை பொருட்கள்), கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பா. கல்யாணகுமார் (காகித கூழ் பொம்மைகள்), தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கி. சந்திரசேகரன் (கண்ணாடி கலைப்பொருட்கள்) ஆகிய 9 விருதாளர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பூம்புகார் மாநில விருதிற்கான தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை, 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்.

இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத்

தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி. வே. அமுதவல்லி, தமிழ்நாடு கைத்திறத்

தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண் இயக்குநர் திருமதி. சு. அமிர்த ஜோதி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

**மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!**

தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 21-02-2025 வெள்ளிக்கிழமை, காலை 09.00 மணியளவில், சென்னை, தேனாம்பேட்டை, அண்ணாசாலை, "அண்ணா அறிவாலயத்தில்", எனது தலைமையில், மாநில மாணவர் அணித் தலைவர் இரா. ராஜீவ்காந்தி - இணைச் செயலாளர்கள் சி. ஜெரால்டு, எஸ். மோகன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன், சேலம் ரா. தமிழரசன், அதலை பி. செந்தில் குமார், கா. அமுதரசன், பி.எம். ஆனந்த், வி.ஜி. கோகுல், திருமதி பூர்ணசங்கீதா, திருமதி ஜெ. வீரமணி, ஜெ. இராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுபோது மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1) கழகத் தலைவர் -தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள்; 2) மாணவர் அணி ஆக்கப் பணிகள் - குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை.
நாள்- 17.02.2025

**சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி





கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன், நேற்று முன்தினம் தியாகதுருகம் வடக்கு ஒன்றிய கழக செயலாளரும், ஒன்றியக்குழு துணை பெருந்தலைவருமான, இரா.நெடுஞ்செழியன் அவர்களின் தந்தையும், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினருமான மறைந்த ஐயா இரா.இராசு அவர்களின் திருவுருவப்படத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு, ஐயாவின் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து, மலர் தூவி, மரியாதை செய்து, புகழ் அஞ்சலி செலுத்தி உரையாற்றினார், இந்த நிகழ்வில், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்,மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் பெருந்தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாநில, மாவட்ட ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு புகழ் அஞ்சலி செலுத்தினார்கள்.





விருத்தாசலம் சட்ட மன்ற தொகுதி செயல் வீரர்கள் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் சி. வி. கணேசன் தலைமையில் நேற்று முன்தினம் (17.2.2025) நடைபெற்றது. கடலூர் மாவட்டத்திற்கு அரசு நலத்திட்ட உதவிகள், மற்றும் வேப்பூர் திருப்பெயர் ஜெயப்பிரியா பள்ளியில் நடைபெறும் " பெற்றோர்களைக் கொண்டாடுவோம்" எனும் மைய்க்கருத்துடன் தமிழ் நாடு பெற்றோர் ஆசிரியர் கழக மண்டல மாநாட்டில், கழக தலைவர் – தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள். அதுசமயம் விருத்தாசலம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஒன்றிய கழக, நகர கழக , பேரூர் கழக , கிளை , வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு கழக தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு வழங்குவது குறித்து ஆலோசனை மேற்கொண்டோம். உடன் விருத்தாசலம் சட்ட மன்ற தொகுதி பொறுப்பாளர் சுபா. சந்திரசேகர், மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய , நகர, பேரூர் , கிளை, வார்டு, செயலாளர்கள், மற்றும் நிர்வாகிகள் , அனைத்து சார்பு அணிகள் நிர்வாகிகள், மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்கத்திலிருந்து -ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில்

# ரூ.2.98 கோடி மதிப்பீட்டில், அனைத்து குக்கிராமங்களுக்கும் குடிநீர்!

### அமைச்சர் இ. பெரியசாமி தொடங்கி வைத்தார்

திண்டுக்கல்,பிப்.19-

ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்கத்திலிருந்து

ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், எஸ்.பாறைப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட அனைத்து குக்கிராமங்களுக்கும்குடிநீர் வழங்கும் திட்டத்தினை அமைச்சர் இ.பெரியசாமி தொடங்கி வைத்தார்.

மேலும், எஸ்.பாறைப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ரூ.34.85 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட கட்டடத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் இ.பெரியசாமி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழக மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, அவற்றை தொடர்ந்து செயல்படுத்தி, இந்தியாவிலேயே தலைசிறந்த முதல்வராக திகழ்கிறார். தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளை தொடர்ந்து நிறைவேற்றி வருவதோடு, தேர்தல் நேரத்தில் சொல்லாத பல்வேறு திட்டங்களை அறிவித்து, அத்திட்டங்கள் அனைத்தும் கடைகோடி மக்களையும் சென்றடையும் வகையில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்.

எஸ்.பாறைப்பட்டி ஊராட்சியில் உள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதற்காக ஜல்ஜீவன் திட்டத்தின் மூலம் ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக நீர் உறிஞ்சு கிணறு ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்க அணையின் கசிவு நீர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. நீர் உறிஞ்சு கிணற்றிலிருந்து தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிக்கு தண்ணீர் கொண்டு செல்ல மின்மோட்டார் அறை மற்றும் குழாய் இணைப்பு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மூலம் வண்ணம்பட்டி, கெண்டையாம்பட்டி, கேப்புசோலைப் பட்டி, இராமநாதபுரம், ஆர்.வி.எஸ்.பண்ணை, தாதனூர் ஆகிய குக்கிராமங்களுக்கும் குடிநீர் கொண்டு செல்லப்படுகிறது. மேலும் 91 வீடுகளுக்கு வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆத்தூர் வட்டம், அக்கரைப்பட்டி, மல்லையாபுரம், இராமநாதபுரம், வண்ணம்பட்டி ஆகிய சுற்று கிராமங்களுக்கு ஆத்தூர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், சித்தையன்கோட்டைக்கு அணையிலிருந்து பெரிய திட்டத்தை வகுத்து, அழகர் நாயக்கன்பட்டி மற்றும் லெட்சுபுரத்தில் குடிநீர் தொட்டி கட்டி இப்பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த அரசு யார் சொன்னாலும் கேட்கக்கூடிய அரசாகவும், செயல்படுத்தக்கூடிய அரசாகவும், யார் மறந்து விட்டாலும் திரும்பி பார்க்கக் கூடிய அரசாகவும் நிச்சயமாக இருக்கும். மல்லையாபுரம் குளத்தை ஆழப்படுத்தி, அக்குளத்திற்கு வரும் வாய்க்கால்களை சிமெண்ட் வாய்க்கால்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியின் மூலம் இப்பகுதிக்கு நிலத்தடி நீர் உயர வாய்ப்பு உள்ளது.

எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில், சமத்துவம், சகோதரத்துவத்துடன் அனைவரும் வாழ வேண்டும் என்பதற்காகவும், அனைவரையும் சென்றடையும் வகையில் தொடர்ந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் முதலமைச்சர் அவர்களுக்கு நாம் என்றென்றும் உறுதுணையுடன் இருந்து செயல்பட வேண்டும்.

இவ்வாறு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் இ.பெரியசாமி பேசினார்.

அதனைத் தொடர்ந்து,அமைச்சர் இ.பெரியசாமி எஸ்.பாறைப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் கனிம வளங்கள் மற்றும் சுரங்கங்கள் திட்டத்தின் மூலம் ரூ.34.85 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட 2 வகுப்பறைகள் கொண்ட கூடுதல் கட்டடத்தை திறந்து வைத்தார்.

### மதுரை வடக்கு மாவட்டம் மதுரை மேற்கு தொகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம் !

# மதுரை மேற்கு தொகுதியை மீட்டெடுப்போம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி உறுதி!

மதுரை, பிப். 19-

மதுரை வடக்கு மாவட்டம் மதுரை மேற்கு தொகுதி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றதில் மாவட்ட செயலாளரும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்று மதுரை மேற்கு தொகுதியை மீட்டெடுப்போம் என்றும் வரும் 23ஆம் தேதி தொகுதியின் பொது உறுப்பினர்கள் கூட்டம் வெகு சிறப்பாக நடைபெறும் எனவும் தெரிவித்தார். அதன் விபரம்,

மதுரை வடக்கு மாவட்டத்தில் மதுரை மேற்கு தொகுதி சேர்க்கப்பட்டதை தொடர்ந்து வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை மேற்கு தொகுதி கழக நிர்வாகிகளை சந்தித்து பல்வேறு ஆலோசனைகள் நடத்தினார்

இதை தொடர்ந்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவர் கூறுகையில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் திராவிட மாடல் அரசை தமிழ்நாடு மக்கள் பாராட்டக்கூடிய வகையில் நடத்தி வருகிறார், கழக அரசின் சாதனைகள் எல்லோராலும் பாராட்டு பெற்று வருகிறது, தலைவர் முதல்வர்



மு.க.ஸ்டாலின் அவர்கள் என்னிடம் மதுரை மேற்கு தொகுதியை ஒப்படைத்துள்ளார், அவரது நம்பிக்கையை காப்பாற்றும் வகையில் மதுரை மேற்கு தொகுதியை மீட்டெடுத்து தலைவர் அவர்களிடம் ஒப்படைப்பேன்.

மேலும் மதுரை மேற்கு தொகுதியில் பொது உறுப்பினர்கள் கூட்டம் வரும் 23.02.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் விளங்குடி ஏ.பி.டி. கம்பெனி அருகே முத்தமிழ் அறிஞர் கலைஞர் திடலில் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் என அனைவரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுவதாக தெரிவித்தார்.

கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தனச்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் மூவேந்திரன், பகுதி செயலாளர்கள் அன்பழகன், மதி வெங்கடேஷ், காவேரி, தவமணி, சுதன், ஒன்றிய செயலாளர் ஆர்.கே.ஜெயராமன், பேரூர் செயலாளர் ராஜாமணி, மாநில அணிகளின் நிர்வாகிகள் அக்ரி கணேசன், ஆர்.கணேசன், வீரகணேசன் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.



விழுப்புரம் மாவட்டம்வல்லம் ஒன்றியம் சண்டி சாட்சியில் ரூ 3.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய குடிநீர் தொட்டியை முன்னாள் அமைச்சர்செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் . உடன் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, இளம்வழுதி உள்ளனர்.